கல்வியைக்கூட அரசியல் ஆக்குகிறார்கள் என்பதுதான் அப்பட்டமான உண்மை. தமிழ்நாட்டில் வாய்கிழியப் பேசும் தி.மு.க.-வினரும், காங்கிரஸ்காரர்களும் இதற்கு ஒரு தீர்வினைத் தந்தால் மாணவர்களின் புண்ணியமாவது அவர்களுக்குக் கிடைக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் மொழி, தமிழ் இனம் என்று வாயால் மட்டுமே சொல்லித் திரிபவர்களைப்போல் அல்லாமல், தமிழ்ப் பாரம்பரிய மருத்துவத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உரிய முக்கியத்துவம் கொடுத்து, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் கோட்டாறு அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் ரூ.10 கோடி செலவில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, பலப்படுத்த நடவடிக்கை எடுக்க ஆணையிட்டு இருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த மாமன்றத்திற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) பன்றிக் காய்ச்சல் நோய் தமிழகத்தில் பரவுவதைத் தடுத்தல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: அடுத்ததாக, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள் பன்றிக் காய்ச்சலைப் பற்றி கேள்வி கேட்டார்கள். பன்றிக் காய்ச்சலைப் பற்றி விரிவாகவும், தெளிவாகவும், தேவைக்கு மேலாகவும் இந்தச் சட்டமன்றத்தில் பேசியிருக்கின்றேன். இன்றைக்கு 77 பேர் பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அதிலே, அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற 60 பேர், நலமுடன் இருக்கின்றார்கள். இதிலே பெரிய பிரச்சினை என்னவென்றால், முதலிலேயே தங்களுடைய உடம்பில் எதிர்ப்பு சக்தி குறைந்த 4 பேர், தனியார் மருத்துவமனைகளில் முதலிலே சிகிச்சை பெற்று இருக்கிறார்கள். தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றவர்களுக்கு முதலிலேயே டாமிபுளு மாத்திரை கொடுக்கப்படவில்லை. அவர்கள் என்ன காரணத்தினாலோ கொடுக்காமல் விட்டுவிடுகிறார்கள். பன்றிக் காய்ச்சலைப் பொறுத்தவரையில், டாமிபுளு மாத்திரையைத் தவிர வேறு எந்த மாத்திரையும் கிடையாது. ஆகவே, பன்றிக் காய்ச்சலுக்கான

2012 ஏப்ரல் 25] *[டாக்டர் வி.எஸ். விஜய்]*

அறிகுறி வந்தவுடனேயே டாமிபுளு மாத்திரையை கொடுத்துவிட்டால், சிகிச்சை முறையில் நல்ல பலன் கிடைக்கும். இல்லாவிட்டால் இரத்தத்திலே பன்றிக் காய்ச்சலுக்கான அறிகுறி அதிகமாகி, உடல் உறுப்புகள் எல்லாம் பாதிக்கப்பட்டுவிடும். அதன்பிறகு, டாமிபுளு மாத்திரை கொடுப்பதால் எந்தவிதமான பலனும் இல்லை. ஆகவே, இன்றைக்குத் தனியார் மருத்துவமனைகளுக்கெல்லாம் "பன்றிக் காய்ச்சலுக்குச் சரியான முறையில் சிகிச்சை அளிக்க முடியாவிட்டால் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவிடுங்கள்" என்ற செய்தி அனுப்பப்பட்டு இருக்கிறது. ஆகவே, இன்றைக்குத் தமிழ்நாட்டில் பன்றிக் காய்ச்சல் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

(அ) பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் கோட்டாறு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி வழங்குதல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரையில் தவறு ஒன்றும் இல்லையே? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது பதிலுரையில், 'உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை; உபத்திரவம் செய்யக்கூடாது' என்று சொன்னார். இதிலே என்ன தவறு இருக்கிறது? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

***திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவமனைப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் கட்சி நல்ல தீர்வினைக் காணவே விரும்புகிறது. நாங்களெல்லாம் அங்கே நேரில் சென்று, அந்தப் பிரச்சினையை நிச்சயமாகத் தீர்த்து, அங்கு படிக்கக்கூடிய மாணவர்களுக்கு அனுமதி வழங்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டோம். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். அவ்வளவுதான். நீங்கள்தான் ஒத்துழைப்புக் கொடுக்கிறோம் என்று சொல்லிவிட்டீர்களே!* Please, sit down. *(குறுக்கீடு) இதில் விவாதம் வேண்டாம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியில் இருக்கின்ற காங்கிரஸ்*